1979 பிப்ரவரி 23]

குறைவாக உள்ள பாசன வசதி உடைய நிலம் உள்ள விவசாயிகள் அல்லது 3 ஏக்கருக்கு மேற்படாமல் பாசன வசதியற்ற நிலம் உள்ளவர்கள் குறு விவசாயிகள் ஆவார்கள்.''

மற்றொரு விவரத்தைப் பற்றிக் கேட்டார்கள் ரிசர்வ் வங்கியிடம் வற்புறுத்தக்கூடாதா என்று. அரசு வற்புறுத்திக் கொண்டு இருக்கிறது. இன்றைக்கும், நாளையும், மறுநாளும் கூடயிருக்கின்ற என். டி. சி. கூட்டத்தில் பத்திரிகைகளில்கூடப் படித்திருப்பீர்கள்—மகாராஷ்டிரா முதலமைச்சர் அவர்கள் அக்ரிகல்சர் ஸ்டேட்ஸ், அதாவது விவசாயம் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அனைத்துமே இந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, வருகின்ற கூட்டத்தில் மிக அழுத்தமாக ஒருமுகமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, நில அடமான வங்கியாக இருக்கும் காலத்தில் கடன் கொடுக்கும் பொழுது இருபதாண்டு தவணை என்று இருந்தது, இப்பொழுது நிலவள வங்கியாக மாற்றப்பட்ட பிறகு நீண்ட காலக் கடன் ஏழாண்டுத் தவணைகளாகக் குறைக்கப்பட்டு விட்டது. பல நாடுகளில்—மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அமெரிக்காவிற்குப் போய்விட்டு வந்தார்கள் அங்கெல்லாம் நீண்ட காலக் கடன்களுக்கு 30 ஆண்டுகளுக்கும் அதிகமான தவணைகள் என்று சொல்லப்படுகிறது—இங்கே இந்தக் கடன்களைத் திரும்பச் செலுத்த முடியாமல் போனதற்குக் காரணம் அவர்களுக்கு தவணைகளை ஏழாண்டுகளாக வைத்திருப்பதுதான், எனவே நீண்ட காலக் கடன்களுக்கு இருபது அல்லது அதற்கும் மேல் உள்ள தவணைகள் என்று ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான யோசனைகளை மனதில் வைத்து நிச்சயமாக இந்த அரசு ஆவன செய்யும்.

சட்டத்துறைகளில் தமிழ் மொழி-பெயர்ப்பு

*வினா எண் 141—திரு. ரா. மார்க்கபந்து: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) C.P.C. Transfer of property Act. Limitation Act, Court Fees Act, போன்ற அன்றாட நடைமுறையில் உள்ள சட்டங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டுவிட்டனவா ?

(ஆ) இல்லையெனில், காலதாமதத்திற்கான காரணம் யாது ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே,

(அ) இல்லை.

(ஆ) உயர்நீதி மன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்உள்ள குற்றவியல் நீதி மன்றங்கள் 14—11—1976 முதல் தீர்ப்புகளையும், ஆணைகளையும் தமிழில் வழங்க வேண்டுமென்ற காரணத்தினால் குற்றவியல் நீதிமன்றங்கள் செயல்படுத்தும் சட்டங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்படுவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுகின்ற சட்டங்கள், சிவில் நீதி மன்றங்களால் செயலாக்கப்பட்டு வருகின்றன. அவைகள் மொழி பெயர்ப்பிற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. இருப்பினும் சொத்து மாற்றுச் சட்டம், அதாவது டிரான்ஸ்ஃபர் ஆஃப் ப்ராப்பர்ட்டி மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. அது ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல் நிலைப் பள்ளிகள்.

*வினா எண். 142—திரு. பெ.சு. திருவேங்கடம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஒன்றியத்திற்கு ஒன்று என்ற கணக்கில் எத்தனை ஒன்றியங்களில் உயர் செகண்டரி துவக்கப்பட்டுள்ளன ?

(ஆ) ஒன்றிய அளவில் உயர் செகண்டரி பள்ளிகள் துவக்கப்படாத ஒன்றியங்கள் எத்தனை ?

(இ) அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 327 ஒன்றியங்களில்.

(ஆ) 47.

(இ) மேல்நிலைப் பள்ளிகளே இல்லாத 47 ஒன்றியங்களில், 33 ஒன்றியங்களின் மேல்நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள நகராட்சிகளில் உள்ள மேல்நிலைப்பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன. மீதமுள்ள 14 ஒன்றியங்களில், ஓரிரு உயர்நிலைப் பள்ளிகளே உள்ளன. அவைகளும் மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தும் அளவுக்கு வசதிகளோ அல்லது சேரும் மாணவர்களின் எண்ணிக்கையோ இல்லை. இத்தகைய ஒன்றியங்களின் மேல் நிலைப் பள்ளிக் கல்வியின் தேவையை அருகிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சி ஒன்றியங்களிலுள்ள மேல் நிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்கின்றன.